# வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
# காயல்பட்டணம்
## வினாடி வினா போட்டி 29.03.2022

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்,வினாடி வினா மன்றத்தின் சார்பாக 25.03.2022 வினாடி வினா போட்டியில் கலந்து கொள்வதற்கான தகுதித்தேர்வு நடைபெற்றது. இதில் துறைவாரியாக ஐந்து மாணவியர் கலந்து கொண்டனர். தகுதித்தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவியருக்கு 29.0.3.2022 காலை 10 மணியளவில் போட்டி ஆரம்பமானது. இப்போட்டியினை வணிக செயலாற்றியல் துறைத்தலைவர் S.A. ரஹ்மத் ஆமினா பேகம் MBA., M.Phil., MBA(HR) நடுவராக பொறுப்பேற்று நடத்தினார்.

இப்போட்டியில் முதலாமாண்டு இயற்பியல் மாணவிகள் S. சுப்ரஜா,R. அனுஷியா, முதலாமாண்டு ஆங்கிய இலக்கிய மாணவி ஸ்ரீநித்யா, சுபாஷினி அடங்கிய Dகுழு முதலிடத்தையும், முதுகலை முதலாமாண்டு கணிதவியல் மாணவி M. முத்துலெட்சுமி இளங்கலை முதலாமாண்டு கணிதவியல் மாணவி A. செல்ஷியா, முதலாமாண்டு ஆங்கில இலக்கிய மாணவி A. ரிஜாய்ஷ் பியூலா அடங்கிய Cகுழு இரண்டாமிடத்தையும் பெற்றது.

இப்போட்டியில் வினாடி வினா மன்றத்தைச் சார்ந்த மாணவியரும், கல்லூரி பேராசிரியைகளும் கலந்து கொண்டனர். இப்போட்டிக்கான ஏற்பாடுகளை மன்ற ஒருங்கிணைப்பாளர் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியை முனைவர் ச. சத்தியபாமா M.A., M.Phil., Ph.D. மன்றத்தின் உறுப்பினர்களா பேராசிரியைகள் வணிகவியல் துறைப்பேராசிரியை P. நஷிரா பானு M.Com., M.Phil., கணிப்பொறியியல் துறைப் பேராசிரியை S.M.A. ஹமீது ஃபர்ஹானா M.Sc., கணிதவியல் துறைப்பேராசிரியை முனைவர் P. சாந்தி M.Sc., M.Phil., Ph.D.,ஆகியோர் செய்திருந்தனர்.